DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No :576/2025**

**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness -4 (LW -9)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு.திருவானந்தம்** | Caste | : |
| Father Name | : **திரு.குருசாமி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **09.06.2026.**

**PW -4 (LW -9 )**

**(**எதிரி ஆஜர்**.) (**சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்**.)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது கரூர் மாவட்டம், குளித்தலை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.11.2024–ம் தேதி பொன்மலை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது காவல் சார்பு ஆய்வாளர் திரு.வினோத் என்பவர் பொன்மலை காவல் நிலைய குற்ற எண்.600/2024, சட்டப்பிரிவுகள் 123 பிஎன்எஸ் 24(1), 6(b) COTPA Act–ன் படி வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் மீராபாய் அவர்களால் புலன் விசாரணை செய்யப்பட்டு எதிரி சுடலைமணி த/பெ.நாராயண பெருமாள், எம்.கே.கோட்டை என்பவரை 19.11.2024–ம் தேதி 23.50 மணிக்கு கைது செய்து அவரிடம் இருந்து சாட்சிகள் கந்தவேல், சையது இப்ராஹிம் உணவு பாதுகாப்பு அதிகாரி ஆகியோர்கள் முன்னிலையில் புகார்தாரர் மகாதேவன் உணவு பாதுகாப்பு அலுவலர் திருச்சிராப்பள்ளி என்பவர் மூலம் 2486 கிராம் பகுப்பாய்வுக்கு எடுத்தது

II ADJ COURT, TRICHY

MADURAI BENCH OF MADRAS HIGH COURT

போக 62 கிலோ 459 கிராம் போதை பொருட்களை கைப்பற்றி புலன் விசாரணை மேற்கொண்டதை 22.11.2024–ம் தேதி மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டேன்.

அன்றைய தினமே வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்திற்கு படிவம் 91–ன் மூலம் அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.த.சா.ஆ.4** ஆகும். அன்றைய தினமே உணவு பாதுகாப்பு தடய ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதற்கான அறிக்கைகள் நகல்கள் **அ.த.சா.ஆ.5, 6** ஆகும். பின்பு அன்றைய தினமே வழக்கு பதிவு செய்த சார்பு ஆய்வாளர் வினோத் அவர்களையும் விசாரித்தேன். சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்ட பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.7**, மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.8** ஆகும்.

பின்பு எனது புலன் விசாரணை முடித்து 29.11.2024–ம் தேதி எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எ.த.கு.வி</u> :**

| | |
|---|---|
| **கேள்வி** | எதிரியின் கடைக்கு அருகே என்ன பள்ளி இருந்தது, எவ்வளவு தொலைவில் இருந்தது என்பது பற்றி அ.சா.1 கொடுத்த புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால்? |
| **பதில்** | நகராட்சி பள்ளி இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| **கேள்வி** | எதிரியின் கடை மேற்படி தடைசெய்யப்பட்ட பொருட்கள் அருந்தி யாரும் பாதிப்புக்குண்டானார்கள் யாரும் புகார் கொடுத்தார்களா என்றால்? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | பார்வை மகஜர், மாதிரி வரைபடத்தில் சம்பவ கடையின் அருகில் பள்ளி இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால்? |
| **பதில்** | மாநகராட்சி கட்டிடம் என்று உள்ளது. |
| **கேள்வி** | நீங்கள் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நீங்கள் சொல்வது போல் எதிரியை சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும், அவர் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால்? |

| | |
|---|---|
| **பதில்** | சரியல்ல. |

**<u>மறுவிசாரணை</u> :** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 09.06.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 09.06.2026

ADU COURT, TRICHY